ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

20.11.2025

1. வந்தேன் என்றருளும் கந்தனே
வணங்கிட காத்தருளும் சண்முகனே
எந்தனை உன் அவதாரமாக்கி
இந்த யுகத்தில் அற்புதம் நிகழ்த்தும் வேலவனே

2. வேலவனே உன்னை போற்றியே
விளம்பிடுவேன் விசுவாவசு தேள் திங்கள்
காலமதில் முதல் குருவார அருளாசி
கண்டுரைப்பேன் அரங்கன் யான் மக்களுக்கு

3. மக்களெல்லாம் சன்மார்க்கம் வழி
மனமுவந்து சரணடைவுதனை
தேக்கமின்றி கொண்டு வந்து
துறையூர் ஓங்காரக் குடிலெனும்

4. குடிலெனும் ஆறுமுகன் நீ ஆளும்
குறைவிலா ஏழாம் படை வீட்டில்
நாடி வந்து உலக மக்கள்தானும்
நம்பிக்கை வைத்து வணங்கி வர

5. வருகவே சோதிநிலை ஆகி
வழிகாட்டும் அரங்கன் என்னுடன்
முருகப் பெருமானும் இணைந்து
முழுமையான ஆசிபலம் தந்தருளக் கூடும்

6. கூடவே அன்னதான சேவையில்
குறைவிலா பொருளுதவி செய்து
நாடெங்கும் கிளைகள் நிறுவி
ஞானிகள் பேரில் பூசை செய்து

7. செய்துமே தருமபலம் கூட்ட
சேவை என எண்ணாமல்
மெய்ஞானம் தரும் கடமையாக
முழுமனதுடன் ஈடுபாடு கொண்டு செயல்பட

8. செயல்பட இந்த கலியுகத்தில்
செய்பவரும் சார்ந்திருப்பவர்களும்
தயவுதனை வேலவனிடம் கண்டு
தருமவான் எனும் அடையாளம் பெருகி

9. பெருகியே ஞானவான்களாக
பேருலகை மாற்றம் புரியும்
ஆறுமுக அரங்க ஞானி என்
ஆற்றல்மிக்க ஞானப்படைகளாக

10. ஆகவே மாறி ஞானிகள் ஆசிபட
அனைவரும் ஞானிகள் ஆவர்
யுகமாற்றம் செய்யும் அன்னதான
உயிர்காக்கும் மகா சேவை தனை

11. தன்னையே யாவரும் பின்பற்றிட
தலைமை ஆளுமை யாவும்
மண்ணுலகில் வேலவன் வழிநடத்தும்
மகான்களே ஆளும் பூமியாக மாறும்
ஆறுமுக அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி